தினமலர்

25-8- 2024

# வங்கதேசத்தின் பொருளாதார எழுச்சியும் வீழ்ச்சியும்

முனைவர் டி.கே. ஜயராமன்

*

பாகிஸ்தானின் முந்தைய கிழக்கு வங்காள மாகாணம் சுதந்திரம் பெற 1971ல் இரத்தக்களரிப் போரை நடத்தி சுதந்திரத்தை வென்ற பிறகு தன்னை வங்கதேசம் என்று அழைத்ததுடன் வங்க கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் எழுதிய "அமார் ஷோனார் பங்களா" ("என் தங்க வங்கமே") யெனும் பாடலையும் அதன் தேசிய கீதமாக உடனடியாக ஏற்றுக்கொண்டது. நமது தேசிய கீதம் 'ஜனகன மன'வை எழுதியதும் கவிஞர் ரவீந்திர நாத் தாகூர் தாம்,

.

.அதைத் தொடர்ந்து, இயற்கை பேரழிவுகள் மற்றும் ராணுவ புரட்சிகளை ஒன்றன் பின் ஒன்றாக வங்கதேசம் எதிர்கொண்டது. 1975ல் ராணுவப் புரட்சியைச் சந்தித்து, . தேசத்தந்தையான முஜிபுர் ரஹ்மான் மற்றும் அவரது குடும்பத்தினர் கொல்லப்பட்டது, முதல் சோகமாகும். . அவரது ஒரே மகள் ஷேக் ஹசீனா வெளிநாட்டில் இருந்ததால் உயிர் பிழைத்தார். அதன் பிறகு அடிக்கடி ஆட்சி கவிழ்ப்புகளும் ஜனநாயகத்தின் மறுபிறப்புகளும் அவ்வப்போது நடந்தன. வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் அரசுகள் மற்றும் அரசுசாரா நிறுவனங்கள், வங்கதேசத்துக்கு தொடர்ச்சியாக நன்கொடைகளை அள்ளிக் கொடுத்தன.

இதன் காரணமாக, ‘சர்வதேச கூடை’ என்று வங்கதேசம் ஏளனம் செய்யப்பட்டது. 2009ல் ஷேக் ஹசீனா பிரதமரான பிறகே, இதற்கு முடிவு கட்டப்பட்டது.

## பொருளாதார சீர்திருத்தங்கள்

கொரியா, தைவானை பின்பற்றி, பொருளாதார சீர்திருத்தங்களை ஷேக் ஹசீனா கொண்டு வந்தார். ஏற்றுமதிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அதுவே வளர்ச்சியின் இயந்திரமாக உருவெடுத்தது. ஏற்றுமதிக்கு உகந்த துறையாக ரெடிமேட் ஆடை தயாரிப்பு தேர்ந்தெடுக்கப்பட்டது. இத்தொழில் பெண்களின் உழைப்பு மற்றும் ஆழ்ந்த ஈடுபாட்டிற்கு பெயர் பெற்றது. பல்கலைக்கழக பட்டதாரி இளைஞர்கள் இந்த வேலைகளில் ஆர்வம் காட்டவில்லை. .இந்தத் தொழிலில் தொழிற்சங்கங்களோ, அரசியல் தலையீடோ இல்லை. அரசும், இறக்குமதிக்கு வரிவிலக்கு போன்ற சலுகைகளுடன் வெளிநாட்டு முதலீட்டாளர்களை வரவேற்றது. மலிவான கூலி, குறைந்த உற்பத்தி செலவுடன் சர்வதேச பிராண்ட்களில் ஆடைகள் கிடைத்ததால், உலக சில்லறை வியாபாரிகள், வங்கதேச ஆடைகளை வாங்க வரிசை கட்டி நின்றனர். பெண்களுக்கு அதிக வேலைவாய்ப்புகள் கிடைத்ததால், குடும்ப வருமானம் பெருகியது. சர்வதேச நிறுவனங்களின் தேவைகளை வங்கதேச அரசு எளிதில் நிறைவேற்றி தந்தது. இதன் காரணமாக, சமீப காலம் வரையில், நாட்டின் மொத்த செலாவணி வருவாயில் 80 சதவீதம் ரெடிமேட் ஆடை ஏற்றுமதியில் இருந்தே கிடைத்தது. ரெடிமேட் ஆடை தயாரிப்பு தொழிலில் கிடைத்த வெற்றி, உலகை வியக்க வைத்தது. வளரும் நாடுகளுக்கு இடையே வங்கதேசம் வேகமான வளர்ச்சி அடைந்தது. குட்டி நாடான வங்கதேசம், பெரிய நாடுகளே வியக்கும் அளவுக்கு பொருளாதாரத்தில் சாதிக்க தொடங்கியது.

ஏற்றுமதி கிடுகிடுவென முன்னேறியதால், 2001ல் 63 பில்லியன் டாலராக இருந்த வங்கதேசத்தின் ஜிடி-பி, 2024ல் 455 பில்லியன் டாலராக உயர்ந்தது. 2011 முதல் 2019ம் ஆண்டு வரையில் நாட்டின் மொத்த உற்பத்தி வளர்ச்சி விகிதம் 6 சதவீதமாக இருந்து. . கரோனா தொற்றுக்கு முந்தைய ஆண்டில் வங்கதேசத்தின் ஜிடிபி 7.3 சதவீதமாக உயர்ந்தது.

கடந்த ஏப்ரலில் வெளியான சர்வதேச நாணய நிதியத்தின் (ஐஎம்எப்) உலக பொருளாதார அறிக்கைபடி, வங்கதேசத்தின் தனிநபர் சராசரி வருமானம் $2,646 டாலர் ஆகும், இது இந்தியாவின் சராசரி தனிநபர் வருமானம் $2700க்கு மிக அருகில்தான்.

## கரோனா பாதிப்பு

கரோனா தொற்றின் பாதிப்பு, வங்கதேசத்தையும் விட்டு வைக்கவில்லை. 2020 மற்றும் 2021ல் சர்வதேச சந்தையில் ஏற்பட்ட பொருளாதார மந்தநிலை, வங்கதேசத்தின் ரெடிமேட் ஆடை ஏற்றுமதியை வெகுவாக பதம் பார்த்தது. அதே நேரத்தில், நாட்டின் மொத்த இறக்குமதியின் மதிப்பு அதிகரித்திருந்தது. ஏற்றுமதி குறைந்து, இறக்குமதி அதிகமாக இருந்ததால், வர்த்தக பற்றாக்குறை இடைவெளி நீண்டது. இதன் பக்கவிளைவால், 2020ல் 46.2 பில்லியன் டாலராக இருந்த அன்னிய செலாவணி கையிருப்பு, 2024ல் 26 பில்லியன் டாலராக சரிந்தது. 2019ல் ஒரு அமெரிக்க டாலருக்கு நிகரான டாக்காவின் மதிப்பு 69ஆக இருந்தது. 2024ல் 112.4ஆக வீழ்ந்தது.

பொருளாதார பின்னடைவில் இருந்து மீள 2023ல் 4.7 பில்லியன் டாலர் கடன் கேட்டு ஐஎம்எப் அமைப்பை வங்கதேசம் நாடியது. வழக்கம் போல நிபந்தனைகளை விதித்து, 4 தவணைகளில் கடன் அளிப்பதாக ஐஎம்எப்

ஒப்புக்கொண்டது. மூன்று தவணைகள் ஏற்கனவே முடிந்துவிட்டன. 33 நிபந்தனைகளுடன் 4வது தவணை, வரும் டிசம்பரில் வருகிறது.

சரியும் அன்னிய செலாவணி கையிருப்பு, அதிகரிக்கும் விலைவாசி, குறைந்த வருவாய், வங்கித்துறையின் மோசமான நிர்வாகம் போன்ற சவால்களில் இருந்து வங்கதேசத்தை மீட்க பல நிபந்தனைகளை விதித்து, ஐஎம்எப் கடன் கரத்தை நீட்டி இருந்தது.

வளரும் நாடுகளுக்கு இந்த சவால்கள் புதிதல்ல. கடந்த காலங்களில் வங்கதேசம் இதுபோன்ற சவால்களை வெற்றிகரமாக சந்தித்துள்ளது. ஆனால், இப்போது, வங்கதேசம் வழிதவறி பயணிப்பதாக தோன்றுகிறது. கடந்த ஜூலை வரை ஏற்பட்ட எல்லா முன்னேற்றங்களும் கனவாகி, காலத்தில் கரைந்து போனது.

## தவறு நடந்தது எங்கே?

வங்கதேசம் சுதந்திரம் பெற்றவுடன், அரசுப்பணிகளில் இடஒதுக்கீட்டு முறை அமல்படுத்தப்பட்டது. விடுதலை போராட்டத்தில் பங்கெடுத்த வீரர்களுக்கு 30 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட்டது. காலப்போக்கில் விடுதலை வீரர்களின் குழந்தைகள், பேரக்குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள், இன சிறுபான்மையினர் உள்ளிட்டோருக்கான அரசு வேலை இடஒதுக்கீடு, 56 சதவீதமாக அதிகரித்தது.

2018ல் வேலையில்லா பல்கலைக்கழக பட்டதாரிகள் வீதிகளில் இறங்கி அரசுப்பணி இடஒதுக்கீடுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டனர். இதற்கு அடிபணிந்த வங்கதேச அரசு, இடஒதுக்கீட்டு முறையையே

நீக்கிவிட்டது. இந்நிலையில், வேலையில்லா திண்டாட்டம் தொடர்ந்து அதிகரித்து, கடந்த ஜூனில் இரண்டாவது முறையாக பட்டதாரி மாணவர்கள் போராட்டத்தில் குதித்தனர்.

இதனிடையே, இடஒதுக்கீட்டு முறையை நீக்குவது அரசியல் அமைப்பு சட்டத்திற்கு எதிரானது என்று சுப்ரீம்கோர்ட், விடுதலை வீரர்களின் வாரிசுகளுக்கான இடஒதுக்கீட்டுக்கு 5 சதவீத உச்சவரம்பை நிர்ணயித்தது., இது மாணவர் தலைவர்களை திருப்திப்படுத்தவில்லை. மாணவர்களின் கோரிக்கை பட்டியலில் பிரதமர் ஷேக் ஹசீனாவின் ராஜினாமாவும் சேர்க்கப்பட்டது,. நாடு வன்முறை காடானது. **ஹசீனா நாட்டை விட்டு வெளியேறிய பிறகு, இடைக்கால அரசு பொறுப்பேற்று மாணவர்கள் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்தது.**

வங்கதேசத்தின் இப்போதைய உடனடி தேவை: அமைதி, சட்டம் மற்றும் ஒழுங்கு. மூன்று மாதங்களுக்குப் பிறகு, புதிய நாடாளுமன்றத்திற்கு தேர்தல் நடத்தப்பட வேண்டும்.புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றத்திற்கு பொறுப்பான புதிய அரசாங்கம் மட்டுமே சட்டபூர்வமான அரசாங்கமாகும். தேர்தல்களுக்குப் பிறகு ஒரு புதிய அரசாங்கத்தால் சீர்திருத்தங்கள் உருவாக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டால், அவை ஜனநாயகத்திற்கு திரும்புவதை உறுதிசெய்து, பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு பங்களிக்கும்.

---

*குஜராத் மாநில முன்னாள் ஐஏஎஸ் அதிகாரியான முனைவர் டி.கே. ஜயராமன், ஆசிய வளர்ச்சி வங்கியின் மூத்த பொருளாதார நிபுணராக (1982-97) இருந்தவர்.*